பாம் பிரிண்ட்
சுவடி
SUVADI
ஏடு 1 ஓலை 8

அறிமுக அட்டைகள் முதல் பிரசுரங்கள் வரை,
விழா மலர்கள் முதல் நினைவு மலர்கள் வரை
அழகிய வடிவமைப்பில், குறுகிய நேரத்தில்,
நியாய விலையில் அச்சிட்டுக் கொள்ள...

Palm Print

பாம் பிரிண்ட்
அச்சகம்

416.284.9545
1345 Morningside Ave #8

palmprint.ca
palmprintinfo@gmail.com

# வாழ்க்கைத் துணையை விரட்டும் வாயுக் கோளாறு

தமிழனுக்குத் தலை போகும் பிரச்சனை, இப்போ வாயுக்கோளாறு ஒரு கேடா? என்று முகப்புத்தக மாவீரர்கள் மல்லுக்கு வரக்கூடும். மறுபுறத்தில் 'தமிழன் தலை போகும் பிரச்சனைகளுக்கு எல்லாம், 'தலை போகும்' என்ற பயத்தில் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருந்ததால் தான், 'தலை' போனது!' என்று மற்றவர்கள் முகப்புத்தகத்துக் கிணற்றடிச் சண்டைக்குத் தயாராகக் கூடும்.

நீதி வழுவா நெறிமுறையில் நடுநிலையாய் நாங்கள் சொல்லக் கூடியது ஒன்றே... 'தமிழனுக்கு வாயுக் கோளாறு வயிற்றுக்குள் மட்டுமல்ல, தலைக்குள்ளும் தான். பிடித்த முயலுக்கும், வாலுக்கும்... வக்காலத்து வாங்க, வரிந்து கட்டிக் கொண்டு வீம்புக்கு விதண்டாவாதம் பண்ணும் வீணர்களுடன் விவாதம் செய்து வெல்ல முடியாது, அது வெறும் வீண்விரயம் என்பதால்... நேரத்தை வீணாக்காமல் விஷயத்துக்கு வருவோம்.

வயிற்றுக்குள் போகும் பருப்புகளும் பயறுகளும் சமிபாடடைவதன் விளைபயனாய், பெரும் ஒலியெழுப்பி, நறுமணம் பரப்பி படுக்கையறையில் சில்மிசம் பண்ணும் வாயுக்கோளாறு, வாழ்க்கைத் துணைகளை விரட்டுவது ஒன்றும் புதியதல்ல.

'நாற்றம் என்ற சொல் முன்பு நறுமணத்தைக் குறித்தது' என தமிழ்ப் பேரறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை 'மலரும் மாலையும்' நூலில் குறிப்பிடுவார். அவர் குறிப்பிட்டது மலரையா அல்லது வாயுக் கோளாறையா என்பது இன்றுவரை புரியவில்லை.

வாயால் குறட்டை ஒரு புறம், மறுபுறத்தால் வாயுக்கோளாறு என மத்தளமாய் இரு பக்கமாயும் அடி வாங்கும் வாழ்க்கைத் துணைகள் விவாகரத்து வரை போவதில் ஆச்சரியம் என்ன?

இரவுகளில் என்ன? பகல் நேரங்களில் வேலை இடங்களிலும் சத்தமில்லாமல் மணம் பரப்பி, மற்றவர்களை நோக்கி குற்றம் சாட்டும் பார்வையை வீசி, மூக்கைச் சுழித்தபடியே அப்பாவி போல அப்பால் நகரும் விண்ணர்களும் உண்டு.

ஆக மொத்தத்தில் வாயு பகவானின் திரு விளையாடல்களின் சாட்சி யங்களாக மட்டுமல்ல, குற்ற வாளிகளாகவும், சில நேரம் சந்தேக நபர்களாகவும், நாங்கள் உள்ளோம்.

சாதாரணமாய் ஒருவர் ஒரு நாளைக்கு பத்து முதல் இருபது தடவை வரைக்கும் வாயு பகவானுக்குப் பின்பக்கத்தால் நமஸ்காரம் செய்கிறார்.

நாங்கள் வழமையில் உண்ணும் பயறு வகைகள் மட்டுமன்றி, தானியங்கள், மரக்கறிகள், பழங்களில் உள்ள மாப்பொருள் சமிபாடடைவதற்குப் போதியளவு நொதியங்களை சமிபாட்டுத் தொகுதி சுரப்பதில்லை. இவற்றை எங்கள் குடலில் உள்ள பக்ரீறியாக்கள் நொதிக்க வைத்தல் மூலம் உண்ணும் போது வெளியிடப்படும் வாயுக்களே இவ்வாறு வெளியேறுகின்றன. இவ்வாறு ஒருநாளைக்கு உருவாகும் வாயுக்களின் கன அளவு கிட்டத்தட்ட அரை லீட்டர் முதல் ஒன்றரை லீட்டர் வரை இருக்கும்.

இந்த வெளியேறும் வாயுக்களில் ஐதரசன், காபனீரொட்சைட், மீதேன் ஆகியன இருக்கும். இவை மணமில்லாத வாயுக்கள். இதனால் தான் வெளியேறும் வாயு எப்போதும் மணம் கொண்டதாக இருப்பதில்லை. நறுமணமான நாற்றத்தைக் கொண்டிருப்பது சல்பர் எனப்படும் கந்தகத்தைக் கொண்டிருக்கும் உணவுகளால் ஏற்படும் ஐதரசன் சல்பைட் வாயு தான். பயறு, பருப்பு, அவரை வகைகள், வெங்காயம், புறொக்கோலி, கோலிபிளவர், பால் உணவுகள் என்பன கந்தகத்தைக் கொண்டிருக்கும்.

இதை விட நீங்கள் விழுங்கும் வளி மண்டல வாயுக்களும் எப்படியோ வெளியேற வேண்டுமே! முக்கியமாக இரவில் உறங்கும் போதும், உண்ணும் போதும் உங்களை அறியாமலேயே, வளியை விழுங்க நேரிடலாம். அதை விட, காபனீரொட்சைட் கரைக்கப்பட்ட சோடா, கொக்கோ கோலா வகைகளைக் குடிப்பதாலும், சூயிங் கம் சப்புவதாலும் வளி சமிபாட்டுத் தொகுதிக்குள் நுழையலாம். இதன் நல்ல 'பின்'விளைவு... வெளியேறும் போது நறுமணம் பரப்பி நாறுவதில்லை.

இந்த வாயு வெளியேற்றத்தை தகாத ஒன்றாகப் பார்க்கத் தேவை யில்லை. ஆரோக்கியமான உணவுச் சமிபாட்டின் பக்கவிளைவே இது. பக்ரீறியாக் களால் இந்த மாப்பொருள்கள் உடைக்கப்படும் போது,

மறுபக்கம்...

பிரஜா உரிமை
வதிவிட உரிமை
பத்திரங்கள் நிரப்புதல்
ஆவண மொழிபெயர்ப்பு

Passport Forms
416.269.5883

Citizenship
PR Forms
Sponsorship Forms
Translation Services

வாழ்க்கைத்துணையை...

உடலுக்குத் தேவையான விட்டமின்களும், கொழுப் பமிலங்களும் உருவாக்கப்பட்டு, எங்கள் குடற் சுவர்களை ஆரோக்கியமாய் வைத்திருக்க உதவுவதுடன், நோய் எதிர்ப்புச் சக்திக்கும் உதவுகின்றன.

எங்களுடைய வாயு வெளியேற் றத்தின் மணம் மற்றவர்களுக்குப் பிரச்சனையாகவும், எங்க ளுக்குப் பிரச்சனையாக இருக்காததற்கும் காரணம் நாங்கள் அந்த மணத்திற்குப் பழக்கப்பட்டிருப்பதே. இன் னொருவர் வீட்டிற்குப் போகும் போது அந்த வீட்டின் மணம் எங்களுக்கு உடனே தெரிவது போல, எங்கள் வீட்டு மணம் எங்களுக்குத் தெரிவதில்லை. வேறு யாராவது நம் வீட்டுக்கு வரும் போது அவர்களுக்கு நமது வீட்டின் மணம் தெரியும்.

நீங்கள் வெளியேற்றும் வாயு நெருப்புப் பிடிக்கக் கூடியது. குறிப்பாக ஐதரசன், மீதேன் போன்ற வாயுக்கள் சாதாரண வெப்பநிலையிலேயே நெருப்புப் பிடிக்கக் கூடியன. இதனால் தான் சகதிகளில் உருவாகும் மீதேன் வாயு எரிவதைப் பார்த்த முன்னோர்கள் கொள்ளிவால் பிசாசு என்று பயந்து நடுங்கி, 'வாயு நமஸ்காரம்' செய்திருக்கிறார்கள்.

எனவே, விஞ்ஞானப் பரிசோதனை செய்கிறேன் பேர்வழி என்று நெருப்புக் குச்சியோடு தீ மூட்டும் 'வாண வேடிக்கை' முயற்சியில் ஈடுபடாதீர்கள். படக்கூடாத இடங்களில் நெருப்புப் பட்டு கருகி, மணவாழ்க்கைக்கு குந்தகம் ஏற்படும் அபாயம் உண்டு.

யூடியூப்பில் இவ்வாறான விஞ்ஞான முயற்சிகளின் வீடியோக்கள் நிறைய உண்டு. பார்த்து மகிழுங்கள். வீட்டில் முயற்சித்து ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள்! வைத்திய சாலையில் அவசர சிகிச்சை நிலையத்தில் விளங்கப்படுவது சங்கடமாயிருக்கும் என்பது மட்டுமல்ல, கதை பரவி, சம்பந்தமில்லாத தாதிகள் உங்கள் எரிகாயங்களைப் பார்வையிட, கூட்டமாய் வர நேரிடலாம். யாருக்குத் தெரியும்? தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத் தள நிருபர்கள் மூலமாய் பதினைந்து நிமிடப் புகழ் பெறவும் வாய்ப்புண்டு.

பொது இடங்களில் அவசரமாய் வாயு வெளியேற்ற நேரிட்டால் தம் பிடித்து சமாளிக்கலாம் என்று நினைக்காதீர்கள். இரவு கட்டி வைத்த பலூன்கள் காலையில் வாடி வதங்கி இருப்பது போல, நிறைந்த வாயு மெதுவாகவே வெளியேறும்.

வாயுக் கோளாறுகளால் அவதிப்படுவோர், Beano எனப்படும் குளிகையைப் பயன்படுத்தி அதைத் தவிர்க்கலாம். அந்தக் குளிகையில் உள்ள நொதியம் சிக்கலான மாப்பொருளை உடைத்து சமிபாடடையக் கூடிய அளவுக்கு மாற்றுவதால் சிறுகுடலிலேயே அவை உடலினால் உறுஞ்சப்பட்டு விடும். இதனால் மாப்பொருள் பெருங்குடலை அடைந்து மணம் பரப்ப முடியாது.

ஆனால், பெருங்குடலில் உள்ள இந்த பக்ரீறியாக்கள் எங்கள் உடல் நலத்துக்கு முக்கியமானவை. எனவே வாயுக் கோளாறைத் தடுக்கிறோம் என்று போய், இந்தக் குளிகையைப் பயன்படுத்தியோ, சத்தான உணவுகளை உண்பதைத் தவிர்த்தோ, உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

எனினும், அளவுக்கு அதிகமான வாயு வெளியேற்றம், அல்லது வயிற்றில் வாயு நிறைந்து, வயிறு கொழுவி, பொருமி வீங்குவது போன்ற நோ இருப்பின் அது மலச்சிக்கலால் வாயு வெளியேற முடியாமை, அல்லது பால் பொருட்கள் ஒத்துக் கொள்ளாமை காரணமாக இருக்கலாம். அவ்வாறான நிலையில் வைத்தியரை நாடுங்கள்.

ஆதலினால், வாயுக் கோளாறால் விவாகரத்து, மறு'மணம்' என்றெல்லாம் போகாமல், மலர் தூவி நறுமணம் பரப்பும் மஞ்சத்தில், வாழ்க்கைத் துணைக்குச் சுவடியை வாசித்துக் காட்டி, 'குசுகுசு' காதல் மொழி பேசி, ஈருடல், ஓருயிராய் கூடி இன்புற்று, 'திரு' 'மண' வாழ்க்கையை இனிதே தொடருங்கள்! ■

# கணனியைப் பிரதி (Backup) செய்யுங்கள்!

அந்தக் காலத்தில் பாரத் ஸ்டூடியோவில் கோட், ரை போட்டு, (அல்லது சேலை கட்டி) க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு எடுத்த அடையாள அட்டைப் படம் முதல் (திருமணப் பேச்சுக்காய் கொடுத்தனுப்ப ஸ்கான் பண்ணியது!) இந்தக் காலத்தில் உங்கள் பிள்ளைகளின் சாமத்தியச் சடங்குப் படங்கள் வரைக்கும் முகப்புத்தகத்தில் சுற்றம் சூழோருக்கு சீன் காட்டுவதற்காக கணனிக்குள் சேமித்து வைத்திருப்பீர்கள்.

உங்கள் கணனியின் வன்தட்டு ஒரு நாளைக்கு திருத்த முடியாதபடி செயலிழந்து இறக்கலாம். வைரஸ் தொற்றி எல்லாவற்றையும் அழித்து விடலாம். அல்லது நீங்களே விசயம் தெரியாமல் எதையாவது அழுத்தப் போய் முழு வன்தட்டையுமே முழுமையாய் அழித்து மீள எழுதி விடக்கூடும்.

உங்கள் வாழ்நாள் நினைவுகள் ஒரு கணப்பொழுதில் மீளப் பெறமுடியாதபடி அழிந்து விடும்.

எனவே, நீங்கள் அவ்வப்போது உங்கள் கணனியில் பதிவு செய்தவற்றை இன்னொரு வன்தட்டு, பிளாஷ் ட்ரைவ், குறுந்தட்டு எதிலாவது பிரதி செய்து வைக்க வேண்டும். வன்தட்டு பழுதடைந்தால் அதில் உள்ள விண்டோஸ், மற்றும் செயலிகளை வேறெங்காவது பெற முடியும். எனவே உங்கள் ஆவணங்கள், படங்கள் போன்று இழந்தால் மீண்டும் பெற முடியாதவற்றை வேறு இடங்களிலும் பிரதி செய்வது போதுமானது.

விண்டோஸ் 8 வைத்திருப்போர், அதில் உள்ள Filehistory என்ற செயலியைப் பயன்படுத்தி பிரதி செய்யலாம். வெளி வன்தட்டு ஒன்றை இணைத்து, Start பட்டனை Right Click செய்வதன் மூலம் Control Panel ஐ திறவுங்கள். அதன் வலப்புற மேற்பக்கத்தில் உள்ள drop down menu ஐ அழுத்தி View by: Large icons ஐ தெரிந்து, File History ஐ கிளிக் பண்ணுங்கள்.

மறுபக்கத்தில் Turn on என்ற குறியிட்ட பட்டனை அழுத்துங்கள். என்னென்ன ஆவணங்கள், கோப்புகளை பதிவு செய்வது, எந்த வன்தட்டில் பிரதி செய்வது போன்றவற்றை இடது பக்கம் உள்ள தெரிவுகளில் தெரிவு செய்யுங்கள். Advanced settings என்பதைக் கிளிக்கி, எவ்வளவு நேரத்திற்கு ஒரு தடவை பிரதி செய்வது என்பதைத் தெரிவு செய்யுங்கள். விண்டோஸ் தானாகவே அவ்வப்போது உங்கள் ஆவணங்களைப் பிரதி எடுக்கும்.

விண்டோஸ் XP, 7, Vista பயன்படுத்துவோர் SyncBack Free என்ற இலவச செயலியை www.2brightsparks.com/freeware/freeware-hub.html இல் தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். புதிய Backup ஐ உருவாக்கி, அதற்கு பெயரிட்டு, எந்த வகையான Backup, எங்கிருந்து எங்கு பிரதி செய்ய வேண்டும் என்பதைத் தெரிவு செய்து, எவ்வளவு நேரத்திற்கு ஒரு தடவை என்பதையும் குறிப்பிட்டால் அது தானாகவே பதிவு செய்து கொள்ளும்.

எனவே இனிமையான நினைவுகளை கணப்பொழுதில் இழந்து போகாமல் மறக்காமல் Backup செய்யுங்கள். (இருந்தாலும், அழகான படத்தைக் காட்டி வாழ்க்கைத் துணையை இப்படி ஏமாற்றியிருக்கக் கூடாது!)

# முற்கடன் பெறின் பிற்பகல் பயன்!

மார்க்கத்தில் மில்லியன் டொலர் கனவு வீட்டை வாங்க கனவு காண்பதற்கு முன்னால், விரலுக்குத் தகுந்த வீக்கம் போல, வருமானத்திற்குத் தகுந்த வீட்டை வாங்குவதற்கு வசதியாக, உங்கள் வருமானத்திற்கு பெறக் கூடிய அதிகளவு வீட்டுக் கடன் அளவை முன்கூட்டியே உறுதி செய்ய வேண்டும். (mortgage pre-approval)

உங்கள் குடும்பத்தின் மாத வருமானம், செலவீனங்களைக் கணக்கில் எடுத்து, வீடு வாங்குவதற்கான உங்கள் தகுதியையும், நீங்கள் வாங்கக் கூடிய அதிகளவு வீட்டு விலையையும் கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் உறுதி செய்து, அந்தக் கடன்களை உங்களுக்குத் தருவதாக உறுதி செய்த பின்னால், அந்தத் தொகைக்கு உட்பட்ட விலையில் வீட்டைத் தேடிக் கொள்வது பின்னால் ஏற்படக் கூடிய மன உளைச்சல்களைக் குறைக்க உதவும்.

உங்களுக்குக் கடன் தருவதற்கான உறுதிமொழியை 90 முதல் 120 நாட்கள் வரை இந்த நிறுவனங்கள் காப்பாற்றும். இதனால் இந்தக் கால இடைவெளிக்குள் வட்டி வீதம் கூடினாலும், உங்களுக்கு உறுதியளிக்கப்பட்ட குறைந்த வட்டி வீதத்திலேயே உங்களுக்கு வீட்டுக் கடன் வழங்கப்படும். வட்டி வீதம் குறைந்திருந்தால், வழங்கிய உறுதி மொழிக்காக அதிக வட்டி வீதத்தில் கடனை வாங்க வேண்டிய கட்டாயமும் இல்லை.

வீடு விற்பவர்களும் முகவர்களும் இவ்வாறாக கடன் உறுதிமொழியைப் பெற்றிருந்தால், நீங்கள் உண்மையாகவே வீடு வாங்கும் எண்ணத்தில் தான் இருக்கிறீர்கள் என்பதை நம்புவார்கள். அதிலும் நீங்கள் போட்டிக்கு விலையைக் கூட்டும் ஏலம் கூறும் விளையாட்டில் ஈடுபட்டால் இது கட்டாயம். காரணம், ஏலத்தில் அதிக விலைக்கு வாங்குவதாகக் கூறிய பின்னால் வீட்டுக்கடன் பெற முடியாமல் அல்லல்படும் போது உங்களோடு இழுபட அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள்.

இந்தக் கடன் உறுதிமொழிகள் இலவசமானவை மட்டுமன்றி, அவற்றைத் தரும் நிறுவனங்களிடம் தான் கடன் பெற வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. வேறெங்காவது குறைந்த வட்டி வீதத்தில் கிடைக்குமாயின், புதிய இடத்திலே கடன் பெற எந்தத் தடையும் இல்லை.

ஆனால் இந்த உறுதிமொழிகள் நிச்சயமானவை இல்லை. சில நேரம் உறுதிமொழி அளித்த நிறுவனம் பின்னால் வேறு காரணங்களைக் காட்டி உங்களை அம்போ என்று கைவிடலாம். இந்த உறுதிமொழிகள் உங்களுக்கு இன்ன வீதத்தில் கடன் தருவோம் என்ற உறுதி மொழி மட்டும் தான். சில நிறுவனங்கள் உங்கள் விண்ணப்பத்திரங்களை மேலோட்டமாகப் பார்த்து விட்டு, உறுதி வழங்கினாலும், பின்னர் முழுமையான விசாரணையின் போது உங்களுக்கு கடன் தர மறுக்கலாம். எனவே இதை முன்பே உறுதி செய்து கொள்வது பின்னால் தலையிடிகளைக் குறைக்கும்.

சில நிறுவனங்கள் முழுமையான விசாரணையின் பின்னர் தான் உறுதி மொழியை வழங்கும்.

மோட்கேஜ் ஆலோசகர்கள் நீங்கள் சொல்லும் விபரங்களைக் கேட்டு விட்டு, உங்களுக்குத் தகுதி இருப்பதாக சான்றிதழ் வழங்கினாலும், உங்களுக்குக் கடன் கொடுக்கும் நிறுவனம் உங்கள் வருமானம், வைப்புத் தொகை, வாங்கும் ஒப்பந்தம், வீட்டின் விபரங்கள், திருப்பிக் கடனைச் செலுத்தக் கூடிய தகைமை எல்லாவற்றையும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுப் பார்த்த பின்னால் தான் உறுதி செய்யும்.

இருபது வீதம் வைப்புத் தொகை, நல்ல வேலை, ஆதாரம் காட்டக் கூடிய வருமானம், கறை படியாத கடன் செலுத்தும் திறன், குறைந்தளவு கடன் போன்றவை இருந்தால் கடன் வாங்குவது சுலபம். இவை இல்லாவிட்டால் எதற்கும் இவற்றையெல்லாம் பரிசீலனை செய்த பின்னால் கடன் தரும் நிறுவனத்தை நாடுவது நல்லது.

வீட்டின் பெறுமதி என்ன (Appraisals) என்பதை சரியானவர்கள் மூலம் அறிந்து கொள்ளுங்கள். வீடு தேடத் தொடங்கும்போது, எந்த வீட்டை வாங்கப் போகிறோம் என்று தெரியாத நிலையில் வீட்டின் பெறுமதியை அறிய முடியாது. கடன் உறுதிமொழிக்கு வீட்டின் பெறுமதி முக்கியமானதில்லை. ஆனால் வீட்டுக் கடன் பெறும்போது வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்வது அவசியம். நீங்கள் வீட்டை அதன் பெறுமதிக்கு அதிகமாக வாங்குகிறீர்கள், வீட்டில் பெரிய குறைபாடுகள் உள்ளன என்று தெரிந்தால், நீங்கள் பெற்றுக் கொண்ட கடன் உறுதிமொழியால் எந்தப் பயனும் இல்லை. நிதிநிறுவனங்கள் உங்களுக்குக் கடன் தரமாட்டா.

எனவே வீடு வாங்கும் ஒப்பந்தத்தில் கடன் பற்றிய விதிகளைச் (Financing conditions) சேர்க்கலாம். அல்லது வீட்டை வாங்கச் சம்மதித்து ஒப்பந்தம் செய்ய முன்னால் வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ளலாம். அதிலும் இருபது வீதத்திற்கும் குறைவான வைப்புத் தொகை செலுத்தினால், உங்கள் வீட்டுக்கடனுக்கு காப்புறுதி செய்ய வேண்டும். CMHC போன்ற காப்புறுதி நிறுவனங்கள் கடன் உறுதிமொழி பற்றிக் கணக்கெடுப்பதேயில்லை. அவை உங்கள் வீட்டுக் கடனைக் காப்புறுதி செய்ய மறுத்தால், கடன் கிடைக்காமல் வீட்டை வாங்க முடியாமல் போவதுடன், உங்கள் வைப்புத் தொகையையும் இழந்து, சில நேரம் வீட்டை விற்பவர் உங்களை நீதிமன்றத்திற்கு இழுக்க நேரிடலாம்.

ஆனாலும் வீட்டின் பெறுமதியை மதிப்பிடுபவர்கள் உங்கள் வீட்டின் சகல பிரச்சனைகளையும் அறிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். முக்கியமாக தொடர்மாடிக் குடியிருப்பு வீடுகளின் பெறுமதியை அறிந்து கொள்ள அவர்கள் அந்த குடியிருப்புத் தொகுதியின் இயக்குனர் சபைக் கூட்டக் குறிப்புகள், நிதிநிலைமைகள், கட்டட நிர்மாணப் பிரச்சனைகள் பற்றி எல்லாம் ஆராய்வதில்லை. சில நேரம் இந்தப் பிரச்சனைகள் தலைதூக்கினால், உங்களுக்கு கடன் கிடைக்காமல் போகலாம்.

கடன் உறுதிமொழி கிடைத்த பின்னால் வேறு கடன்கள் நேரத்திற்கு கட்டாமல் விடுதல், புதிய கடன்கள் பெறுதல், வேலை மாறுதல், வேறு யாருக்காவது கடன் பிணை நிற்றல் போன்ற விவகாரங்களால் உங்களுக்குக் கிடைத்த கடன் உறுதி மொழி ரத்தாகலாம்.

கடன் உறுதிமொழி தரும் நிதிநிறுவனங்கள் குறைந்தளவு வட்டி வீதம் தரும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. வெளியில் அதை விட குறைந்த விகிதத்தில் வீட்டுக் கடன் பெறலாம். எனவே வீடு வாங்கும் ஒப்பந்தம் கைச்சாத்தாகுமுன்னர் ஒரு மாதத்திற்கு முன்னால் கடன் வீதத்தை கவனியுங்கள். உங்களுக்கு உறுதியளித்ததை விட, குறைவான வட்டியில் கடன் கிடைக்கும் என்றால், அந்த வட்டி வீதத்திற்கு குறைக்கும்படி நீங்கள் கேட்கலாம்.

ஆனால் வட்டி வீதம் என்பது வீடு வாங்கக் கடன் வாங்குவதில் ஒரு அம்சம் மட்டுமே. எனவே குறைந்த வட்டியைக் காட்டி உங்களை மாட்டி கொழுக்குப் பிடி போடக் கூடிய கடன் தருவோரிடம் சிக்குப்படாமல் கவனமாக இருங்கள்.

'உங்க உதெல்லாம் தேவையில்லை. நீங்கள் வாங்கோ வெண்டு தாறம்' என்று யாராவது சொன்னால், இது நேர்மையான முறையில் வீட்டுக் கடன் பெறுவோருக்கான அறிவுரை மட்டுமே.

வீடு - கனவிலிருந்து கைக்கெட்டிய தூரத்திற்கு!
Leo Swampillai
Sales Representative
Homelife/Future
Realty Inc.Brokerage*
Bus:905.201.9977
416.347.8732
leo33@rogers.com

# பொறுப்புள்ள பார்த்தசாரதியாகி விபத்துக்களைத் தவிருங்கள் - 3

வாகனத்தின் ஹோர்ணை மற்றச் சாரதிகளின் கவனத்தை ஈர்க்கப் பயன்படுத்துங்கள். உங்கள் கோபத்தைக் காட்டுவதற்கு அதைப் பயன்படுத்தப் போய், ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

அருகில் போகும் வாகனத்தின் குருட்டுப் புள்ளிக்குள் நீண்ட நேரம் நிற்காதீர்கள். அந்த வாகனக்காரார் நீங்கள் இருப்பதை உணராமல் பாதை மாற்ற நேரிட்டால், இரண்டு பேருக்குமே ஆபத்து.

சிவப்பு விளக்கில் தரித்திருக்கும்போது, முன்னால் நிற்கும் வாகனத்திற்கு மிக நெருக்கமாக நிற்காதீர்கள். உங்கள் வாகனத்தை அடுத்த பாதைக்கு திருப்ப வசதியான இடத்தை விட்டு வைப்பது நல்லது.

இடப் பக்கம் திரும்புவதற்கு வீதியின் நடுப்பகுதியில் நிற்கும்போது, உங்கள் சக்கரங்களை நேராக வைத்திருங்கள். திருப்பி வைத்திருந்தால், பின்னே வருபவர் உங்களை மோதினால், உங்கள் வாகனம் எதிரே வரும் வாகனங்களோடு மோத நேரிடலாம்.

மஞ்சள் விளக்கு நீங்கள் வாகனத்தை வேகம் குறைப்பதற்காகவே அன்றி, வேகத்தைக் கூட்ட அல்ல. சிவப்பு விளக்கு வருவதற்குள் கடக்க முடியாவிடில், மெதுவாக கடவுங்கள். சிவப்பு விளக்கு வரப் போகிறது என்று தெரிந்தும் கடக்க முயற்சிக்காதீர்கள்.

அடுத்த பாதையிலிருந்து உங்கள் பாதைக்குள் வர சிக்னல் போட்டவர்களுக்கு பெருந்தன்மையுடன் இடம் கொடுங்கள். வேண்டுமென்று இடம் விடக் கூடாது என்பதற்காக முன் வாகனத்தின் பின் புறத்தை முத்தமிடாதீர்கள். நீங்கள் செய்யும் இந்தப் புண்ணியம் வேலை செய்து, பின் எப்போதாவது எங்காகிலும் நீங்கள் உள் நுழையும்போது மற்றவர்கள் இடம் தந்தால், கையசைத்து நன்றி தெரிவியுங்கள். உங்களுக்கு இடம் தர வேண்டியது அவர்களின் வரலாற்றுக் கடமை என்ற உணர்வில் பேசாமல் போகாதீர்கள்.

அவ்வப்போது வாகனம் ஓட்ட லாயக்கற்றவர்களைச் சந்திக்க நேரிடலாம். உங்கள் அவசரம் தெரியாமல், மாமியார் வீட்டுக்குப் போவது போல, அவர்கள் மிக மெதுவாக மாட்டு வண்டிக் கணக்கில் உருட்டிக் கொண்டு போவது கோபத்தை வருவிக்கலாம். கோபம் வராமல் பொறுமை காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாகனம் ஓட்ட ஆரம்பித்த காலத்தில் உருட்டிக் கொண்டு தானே போயிருப்பீர்கள்.

சில நேரங்களில் விதிமுறைகள் தெரியாமல், குதிரையோடி அனுமதிப் பத்திரம் எடுத்தவர்களும், மனைவீ மீதான கோபத்தை வாகனத்தின் மீது காட்டுபவர்களும், 'எவன் வந்து பின்னால் இடிப்பான், காப்புறுதிப் பணம் எடுக்கலாம்' என்ற நினைப்பில் அலைபவர்களும் என பல சனிபகவான் அவதாரங்கள் அவ்வப்போது விதிவசத்தால் வந்து தொலைப்பார்கள். முன்னே போகும்போது காரண காரியமில்லாமல் நடுவீதியில் காரை நிறுத்துபவர்கள் முதல் மற்றவர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதை மனதில் கொள்ளாமல், குறுக்கே பாய்பவர்கள் வரைக்கும் ஊருலகத்தில் பல பிரகிருதிகள் வாகனம் ஓட்டுகிறார்கள்.

விபத்து நேராமல் வீடு சேர்வது எமது சாதுரியத்தில் மட்டுமல் அல்ல, எங்களைச் சூழ உள்ள பார்க்காத சாரதிகளின் கையிலும் உள்ளது.

வாகனத்தில் ஏறி வீரமோ, விலாசமோ காட்ட முயற்சிக்காமல், விவேகத்தைக் கடைப்பிடியுங்கள். உங்கள் வாகனத்தில் பயணம் செய்பவர்களின் உயிர் உங்கள் பொறுப்பில் என்பதை உணர்ந்து, பொறுப்புணர்வைக் கடைப் பிடியுங்கள்.


பிள்ளைகளை அருகில் வைத்துக் கொண்டு மற்ற சாரதிகளை தூஷணத்தில் திட்டாதீர்கள். அருகில் உள்ள காதலிக்கு விலாசம் காட்ட ஸ்டண்ட் வேலைகளில் ஈடுபடாதீர்கள். பொலிஸ்காரார் மறித்தால், காதலி முன்னால் அசடு வழிய வேண்டி நேரிடலாம்.

கோபத்தில் மற்றச் சாரதிகளுக்கு நடுவிரலைக் காட்டப் போய், சில நேரங்களில் மூக்குடைபடவும் நேரிடலாம். வாகனம் ஓட்டுவதென்பது உரிமையல்ல, சலுகை. பொறுப்பான பார்த்தசாரதியாய் இருங்கள்!

எங்களுடைய பாதுகாப்பு எங்கள் கையில் தான் உள்ளது என்பதை நினைவில் கொண்டு, வாகனத்தை ஓட்டினால், அருகில் உட்கார்ந்திருக்கும் அர்ச்சனாக்களின் அர்ச்சனைகள் இல்லாமல் மாமி வீடு போய் சேரலாம்.

தன்னுடைய உயிருக்குயிரான மகளை கண் கலங்காமல் காக்கும் உங்களுக்கு உங்கள் மாமி முட்டைக் கோப்பி போட்டுத் தரக்கூடும்.

(நமக்கு அந்தப் பாக்கியம் இன்று வரைக்கும் இல்லை!)



'பின்' குறிப்பு

இரண்டு மாதம் சுவடியைக் காணவில்லை என்றதும் 'கண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா, கருகத் திருவுளமோ?' என்று மனம் நொந்த வாசகர்கள் 'வெளிவருமா?', 'எப்போ வெளிவரும்?' என்று கேட்டவாறே இருந்தனர். ஒரு தனித் தாளில் வெளியாகும் இதழ் ஏற்படுத்திய தாக்கம் பிரமிப்பூட்டுகிறது.

வேலைப்பழுவே அன்றி, வெறும் வாயுக்கோளாறு அல்ல!

சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் நிறையவே தேங்கி உள்ளன. ஆக்கங்களை அதிகரிக்க பக்கங்களை அதிகரிக்கும் எண்ணம் உண்டு. ஆனால் அதற்கான செலவீனங்கள் உண்டு.

எங்கள் விளம்பரதாரர்களை ஆதரித்தும், தெரிந்தவர்களை விளம்பரம் செய்யுமாறு ஊக்குவித்தும், எங்கள் அச்சகத்தில் சேவைகளைப் பெற்றும் என உங்கள் ஆதரவு இருந்தால், சாதிக்க முடியாதது தான் என்ன?

முன்கூட்டிய கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். புத்தாண்டில் ('மண') வாழ்வு சிறப்புப் பெறட்டும்!

**கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

Palm Print Inc
Design & Print
படம் பதித்த
• கோப்பைகள் • ரீசேட்டுகள்
• Copy • Print
• Signs
• Logo Design • Ad Design
Palm Print
416.284.9545
1345 Morningside Ave #8
palmprint.ca
palmprintinfo@gmail.com

This newsletter is edited, printed and published by Palm Print Inc.

இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது